உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 01.05.2026 • மலர் 04 • இதழ்: 121 • Edition : Nagercoil • 01.05.2026 • Vol : 04 • Issue : 121 • Page : 4 • Rs. 5/-

### 'உழைப்பாளர்களின் உண்மைத் தோழனாக

# திமுக என்றென்றும் திகழ்ந்திடும்

## முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் மே தின வாழ்த்து



சென்னை, மே. 1

தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள மே தின வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது;

"உழைப்பு என்பது மனித இனத்தின் வளர்ச்சிக்கு மட்டுமின்றி, அதன் அரசியல், சமூகப் பரிணாமத்திற்கும் அடிப்படைக் காரணியாக இருக்கும் உந்து சக்தியாகும். உலகினை உழைப்பால் செலுத்தும், உலகினுக்குத் தங்கள் வியர்வையால் உயிரூட்டும் பாட்டாளி வர்க்கத்தினருக்கு எனது உழைப்பாளர் நாள் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்காக மே நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை, சென்னையில் மே தினப் பூங்கா, தொழிலாளர் நல வாரியம் என எண்ணற்ற பங்களிப்புகளைக் கழக ஆட்சி தோறும் பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் செய்து வந்தனர்.

'தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் சந்தித்திருக்காவிட்டால் நானும் கம்யூனிஸ்டாகத்தான் ஆகி இருப்பேன்' என்று சொன்ன தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் ஆட்சி அமைந்த போதெல்லாம் தொழிலாளர் நலம்காக்க எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றியது வரலாற்றின் பக்கங்களில் பொன்னெழுத்துகளாக மின்னிக் கொண்டிருக்கிறது.

அந்த வழித்தடத்தில் தான் திராவிட மாடல் அரசிலும், இந்தியாவுக்கே வழிகாட்டும் பல தொழிலாளர் நலத்திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம். கழனியிலும் தொழிற்சாலைகளிலும் பாடுபடும் உழைப்பாளத் தோழர்களின் நலன்களை பாதுகாப்பது போலவே, தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள பெண்கள் மற்றும் திருநங்கைகள் புதிய ஆட்டோ ரிக்சா வாங்க மானியம், பதிவுபெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி, அமைப்புசாரா தொழிலாளர்களின் நலன்களையும் பாதுகாக்கிறோம்.

அதோடு, இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்திடவும் நலவாரியம் உருவாக்கப்பட்டு, அதில் பதிவு செய்த தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் புதியதாக eScooter வாங்க மானியம் வழங்கும் புதிய திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதுமட்டுமின்றி, அவர்கள் பணிகளுக்கிடையே ஓய்வு எடுக்கும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இப்படி சாதனைகள் பல படைத்தும், பாட்டாளி மக்களின் உயர்வுக்கு நாம் கொண்டுள்ள உறுதியை வெளிப்படுத்தும் விதமாகவும், "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள், நீங்கள் இழப்பதற்குக் கைவிலங்குகளைத் தவிர எதுவுமில்லை" என அழைத்த உலக மாமேதை கார்ல் மார்க்சுக்கு சென்னையில் சிலை அமைத்துள்ளோம். இப்படி, சொல்லாலும் – செயலாலும் – வரலாற்றுச் சின்னங்களாலும் உழைப்பாளர்களையும் உழைப்பையும் போற்றுகிறோம்.

உழைப்பையும், உழைப்போரையும் கொண்டாடும் இந்த மே நாளில், திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக என்றென்றும் திகழ்ந்திடும் என்ற உறுதியையும், உழைக்கும் தோழர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும் உளமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## உழைக்கும் தோழர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடுவோம்: வைகோ மே தின வாழ்த்து

சென்னை, மே. 1

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள மே தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பதாவது:

முதலாளித்துவ நுகத்தடியில் அடிமைகளாகப் பூட்டப்பட்டிருந்த உலகத் தொழிலாளர்கள் விடுதலை பெற்ற வீர வரலாறு பிரகடனம் செய்யப்பட்ட நாள்தான், 'மே நாள்' ஆகும்.

உதயசூரியன் உதிக்கும் அதிகாலை முதல், அந்தி சாயும் வேளை வரை தொழிலாளர் வர்க்கம் வேலை செய்வதற்கு விதிக்கப்பட்ட கொடுமைக்கு முடிவுகட்ட 19ம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே உரிமைக்குரல் எழுப்பப்பட்டது. 16 மணி நேரம் முதல் 20 மணி நேரம் வரை உழைப்புச் சுரண்டலுக்கு ஆளான தொழிலாளர்கள் முதன் முதலில் 1806ல் அமெரிக்க பிலடெல்பியா நகரில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். அமெரிக்காவில் 1866ல் உருவான தேசிய தொழிற்சங்கம், "எட்டு மணி நேரம் வேலை நாள்" என்பதை சட்டமாக்க வேண்டும் என்று போராடியது.

1877ல் நடைபெற்ற வேலைநிறுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான அமெரிக்கத் தொழிலாளர்கள் பங்கேற்றனர். 1884ல் அமெரிக்காவில் 8 மணி நேர இயக்கத்தின்போது எரிமலையென வெடித்தப் போராட்டங்கள்தான் மே நாள் எழுச்சியாக வடிவம் பெற்றன. 1886ல் 8 மணி நேர வேலை நாளுக்கானப் போராட்டம் தீவிரமடைந்தது. ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட அமெரிக்கத் தொழிலாளர்கள் மாபெரும் வேலை நிறுத்தத்தில் இறங்கினர்.

1886 மே முதல் நாள் சிகாகோ நகரில் தொழிலாளர் போராட்டம் உச்சத்தை எட்டியது. அரசின் அடக்குமுறை தர்பார் தலைவிரித்து ஆடியது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். 1886 மே 3, 4 ஆகிய நாட்களில் காவல் துறையினரின் தாக்குதல் எல்லைகடந்தன. சிகாகோ நகரில் உள்ள 'ஹே மார்க்கெட்' சதுக்கத்தில் கூடிய லட்சக்கணக்கான தொழிலாளர்கள் மீது காவல் துறை துப்பாக்கி சூடு நடத்தியது. ரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடிய இந்த வன்முறையில் நான்கு தொழிலாளர்கள் பலி ஆயினர்.

தொழிலாளர் தலைவர்களான ஆல்பர்ட் பார்சன்ஸ், ஆகஸ்ட் ஸ்பைஸ், ஜார்ஜ் ஏங்கல், அடால்ப் பிஸ்சர் ஆகிய நால்வரும் 1887 நவம்பர் 11ல் தூக்கிலிடப்பட்டனர். 'ஹே மார்க்கெட் தியாகிகள்' என்று வரலாறு போற்றுகின்ற தொழிலாளர் தலைவர்கள் தூக்கிலிடப்பட்ட ஓராண்டுக்குப் பின்னர் எட்டு மணி நேர இயக்கம் மீண்டும் புத்துயிர் பெற்றது.

நான் அமெரிக்கா சென்றிருந்தபோது, வைகோல் சந்தை சதுக்கத்திற்குச் சென்று அருகில் இருந்த கல்லறை தோட்டத்தில் அந்த நால்வரின் கல்லறைகளுக்கு புகழ் வணக்கம் செலுத்தினேன். 1889 மே முதல் நாள் அமெரிக்கத் தொழிலாளர் கூட்டமைப்பு மாபெரும் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்தது. அதற்கு அடுத்த ஆண்டு 1890 மே முதல் நாள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைப் பதாகையை உயர்த்திப்பிடிக்கும் தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்பட்டது.

உலகத் தொழிலாளர் வர்க்கம் ரத்தம் சிந்தி, உயிர்ப் பலிகள் கொடுத்துப் போராடிப் பெற்ற உரிமையான எட்டு மணி நேரம் வேலைநாள் என்பது உலகம் முழுவதும் சட்டமாக்கப்பட்டது. 1990ம் ஆண்டு ஏப்ரல் 30ம் நாள் மாநிலங்களவையில் மே 1ம் நாளை ஊதியத்துடன் கூடிய விடுமுறை நாளாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்று நான் எழுப்பிய கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, அன்றைய தலைமை அமைச்சர் வி.பி.சிங் மே முதல் நாளை மத்திய அரசின் ஊதியத்துடன் கூடிய விடுமுறை நாளாக அறிவித்தார். இந்தியாவில் நாடு விடுதலை பெற்ற பின்னர் இல்லாத அளவுக்கு நரேந்திர மோடி அரசு தொழிலாளர் வர்க்கத்தின் மீது மோசமான தாக்குதலைத் தொடுத்து வருகிறது. உழைக்கும் தோழர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடுவோம் என்பதோடு, மே முதல் நாள் வாழ்த்துக்களை தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## தேர்தலில் வெற்றி பெற்றவுடன் வேறு எங்கும் சென்றுவிடாதீர்கள்

### த.வெ.க. வேட்பாளர்களுக்கு விஜய் கட்டளை



சென்னை, மே. 1

தமிழகத்தில் கடந்த 23ந்தேதி நடைபெற்ற சட்டசபை தேர்தலில் 4 முனைப்போட்டி நிலவியது. தேர்தலுக்கு புதிய வரவான தமிழக வெற்றிக் கழகம், எடப்பாடி தொகுதியை தவிர ஏனைய 233 தொகுதிகளிலும் களம் கண்டது.

இந்த நிலையில், த.வெ.க. வேட்பாளர்களை இன்று சென்னை வருமாறு, அக்கட்சியின் தலைவர் விஜய் அழைப்பு விடுத்திருந்தார். வரும்போது, வாக்குப்பதிவு நாளில் தேர்தல் அலுவலர் வழங்கிய 17 சி படிவத்தையும் எடுத்து வருமாறு கூறியிருந்தார்.

இந்த நிலையில், சென்னையை அடுத்த பனையூர் அலுவலகத்தில் இன்று மதியம் த.வெ.க. வேட்பாளர்களை கட்சியின் தலைவர் விஜய் சந்தித்து பேசினார். அப்போது, "தேர்தலில் அமோக வெற்றி பெறுவோம். வேட்பாளர்களாக நீங்கள் வெற்றி பெற்ற உடன் வேறு எங்கும் சென்று விடாதீர்கள். பனையூர் அலுவலகத்திற்கு வந்துவிடுங்கள். உங்களுக்காக நான் காத்திருப்பேன்.

இதுவரை நன்றாக பணிபுரிந்துள்ளீர்கள். வாக்கு எண்ணிக்கை நாளில் கவனமாக இருங்கள்" என்று கூறியுள்ளார். அதாவது, ஆளுங்கட்சியும் (தி.மு.க.), ஆண்ட கட்சியும் (அ.தி.மு.க.) பணம் கொடுத்து அழைத்தால், கட்சி தாவிவிடாதீர்கள் என்பதைத்தான் விஜய் அவ்வாறு கூறியிருக்கிறார்.

## 'கல்வியின் நோக்கம் வேலை வாய்ப்பைப் பெறுவது மட்டுமல்ல'

### மாணவர்களுக்கு தமிழக கவர்னர் அறிவுரை

நீலகிரி, மே. 1

நீலகிரி மாவட்டம் லவ்டேல் பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் நடைபெற்ற விழாவில் தமிழக கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கலந்து கொண்டு மாணவர்களிடம் உரையாற்றினார். இந்த விழாவில் அவர் பேசியதாவது;

"கல்வியின் நோக்கம் வேலைவாய்ப்பைப் பெறுவது மட்டுமே என்று நினைக்கக் கூடாது. மாறாக, கல்வி என்பது சமூகம் மற்றும் தேசத்தின் மீதான தங்களின் பொறுப்புகளைப் பற்றி சிந்திக்க மாணவர்களைத் தூண்ட வேண்டும். மாணவர்கள் தங்கள் கல்வியை பயன்படுத்தி, நாட்டின் முன்னேற்றத்திற்கும், சமூகத்தின் நல்வாழ்விற்கும் அர்த்தமுள்ள பங்களிப்புகளை செய்ய வேண்டும். வேலைவாய்ப்பு ஒரு முக்கிய இலக்காக இருந்தாலும், மாணவர்கள் தங்கள் துறைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குபவர்களாகவும், தலைவர்களாகவும் ஆக வேண்டும் என்ற இலக்கை கொண்டிருக்க வேண்டும். மனிதநேயத்தை வளர்ப்பதிலும், தனிநபர்களை பொறுப்புள்ள மற்றும் இரக்கமுள்ள குடிமக்களாக உருவாக்குவதிலும்தான் கல்வியின் உண்மையான சாராம்சம் அடங்கியுள்ளது. நேர்மை, அர்ப்பணிப்பு மற்றும் வலுவான தேசபக்தி உணர்வு கொண்ட, சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தன்னலமின்றி பங்களிக்கக்கூடிய தனிநபர்களை உருவாக்குவதே கல்வியின் மிக உயர்ந்த நோக்கம்." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### தென்காசி; கடையம் அருகே

## அத்திரிமலை கோவிலில் நயினார் நாகேந்திரன் சாமி தரிசனம்



தென்காசி, மே. 1

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

இன்றைய தினம், தென்காசி மாவட்டம் கடையம் அருகே மேற்குத்தொடர்ச்சி மலையின் மடியில் இயற்கை எழில் பொங்க அமைந்துள்ள புனித தலமான அத்திரிமலையை தரிசிக்கும் அரிய வாய்ப்பு கிடைத்தது. அங்கு அருள்மிகு அனுசுயாதேவி சமேத அத்ரி பரமேஸ்வர் திருக்கோவில் மற்றும் அருள்மிகு கோரக்கர் திருக்கோவில் ஆகியவை ஆன்மிகத் தெளிவை அளிக்கும் தெய்வீக நிலையங்களாக விளங்குகின்றன.

அத்திரி கங்கை எனப்படும் வற்றாத புனித தீர்த்தத்தில் நீராடி, குடும்பத்தாருடன் மனம் நெகிழ்ந்து இறைவனை பக்தியுடன் தரிசித்தேன்.

இந்த புனித தருணத்தில், பாரத தேச மக்கள் அனைவரும் எல்லா வளங்களுடனும், ஆரோக்கியத்துடனும், அமைதியுடனும் இன்புற்று வாழ இறைவனை மனமார வேண்டிக் கொண்டேன்.

"மேலும் திருக்கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள இயற்கையின் அதிசயமான "அத்திரி கங்கை" இயற்கை ஊற்றை காணும் பெரும் பாக்கியம் கிடைத்தது.

அத்திரி கங்கை என்பது வருடம் முழுவதும் வற்றாமல் ஓடும் புனிதமான இயற்கை ஊற்று. கடும் வறட்சிக் காலங்களிலும் கூட அதன் ஓட்டம் குறையாது என்பது இயற்கை நமக்கு அளித்த அதிசயங்களில் ஒன்று.

இயற்கையும் ஆன்மீகமும் ஒன்றாக கலந்த இந்த தலத்தின் அழகை பாரத மக்கள் அனைவரும் நேரில் சென்று உணர வேண்டும் என்று விரும்புகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாத்தான்குளம் வழக்கு: தண்டனையை உறுதி செய்யக்கோரி சிபிஐ மனு



மதுரை, மே. 1

சாத்தான்குளத்தில் செல்போன் கடை நடத்தி வந்த ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோர், கொரோனா ஊரடங்கு அமலில் இருந்த காலகட்டத்தில் 2020 ஜூன் 19ல் போலீசாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக, சிபிஐ கொலை வழக்குப் பதிவு செய்து காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், சார்பு ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், தலைமைக் காவலர் முருகன், காவலர்கள் சாமதுரை, முத்துராஜா, செல்லதுரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகிய 9 பேரை கைது செய்தனர்.

இந்த வழக்கை, மதுரை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் விசாரித்தது. விசாரணை முடிந்த நிலையில், காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் உள்பட 9 பேருக்கும் தூக்குத் தண்டன விதித்து, ஏப்ரல் 6ம் தேதி நீதிபதி தீர்ப்பளித்தார்.

இந்த தூக்குத் தண்டனையை உறுதி செய்யக் கோரி, தமிழக அரசு மற்றும் சிபிஐ தரப்பில் மதுரை ஐகோர்ட்டு அமர்வில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்தநிலையில், சாத்தான்குளம் தந்தை மகன் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 9 குற்றவாளிகளும் மேல்முறையீட்டு மனுக்களை ஜூன் 1ம் தேதிக்குள் தாக்கல் செய்ய மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. வழக்கின் முக்கியத்துவம் கருதி ஜூன் 4ம் தேதி முதல் தினசரி விசாரிக்கப்படும் என நீதிபதிகள் ஆனந்த் வெங்கடேஷ், ராம கிருஷ்ணன் அமர்வு அறிவித்துள்ளனர்.

விசாரணை நீதிமன்றம் விதித்த மரண தண்டனையை உறுதி செய்யக் கோரி சிபிஐ தரப்பிலும் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றவாளிகளுக்கான தண்டனையை உறுதிப்படுத்த கோரிய மனுவின் விசாரணை ஜூன் 4க்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதற்கிடையே குற்றவாளியான முன்னாள் ஆய்வாளர் ஸ்ரீதர், 15 நாட்கள் பரோல் விடுப்பு கோரிய மனுவையும் நீதிபதிகள் நிராகரித்தனர்.

## ஆண்டிவிளையில்

# மாநில அளவிலான கைப்பந்து போட்டி

### அகஸ்தீஸ்வரம் திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் பாபு தொடங்கி வைத்தார்




கன்னியாகுமரி, மே 1

தாமரைகுளம் அருகே உள்ள ஆண்டிவிளையில் சித்திரை மாத தேர் திருவிழாவை முன்னிட்டு சிவ சக்தி கைப்பந்து கழகத்தார் நடத்தும் மாநில அளவிலான ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மின்னொளி கைப்பந்து போட்டி நேற்று ஊர் மைதானத்தில் வைத்து நடைபெற்றது ஆண்கள் பிரிவில் 20 அணிகளும், பெண்கள் பிரிவில் இருந்து 9 அணிகளும் கலந்து கொண்டனர். இப்போட்டியினை தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் பாபு தொடங்கி வைத்தார்

போட்டிகளில் வென்றவர்களுக்கு ஆண்களுக்கான முதல் பரிசு 20,000, இரண்டாவது பரிசு ₹15,000,மூன்றாம் பரிசு 10,000, நான்காவது பரிசு 7,000, பெண்களுக்கான முதல் பரிசு 7,000, இரண்டாவது பரிசு ரூ 5,000, மூன்றாவது பரிசு 4,000, நான்காவது பரிசு 3,000 இதில் கைப்பந்து கழக நிர்வாகிகள் தலைவர் ஆதி விஸ்வநாதன், செயலாளர் கிருஷ்ண மணி, பயிற்சியாளர்கள் விஜயகுமார், சபாபதி, ஒருங்கிணைப்பாளர் செல்வன் நிர்வாகிகள் ஏற்பாடுகளை செய்தனர் இந்நிகழ்ச்சியில் தாமரை பிரதாப்,ஜான்சன், ஜானி, முன்னாள் பேரூராட்சி தலைவர் தேரூர்முத்து சிறந்த கைத்தொட்டி கழக வீரர் அமுதன், சகாதேவன் மற்றும் கைப்பந்து கழக நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## விளாத்திகுளத்தில்

# வெகு விமர்சையாக நடைபெற்ற சித்திரை திருவிழா தேரோட்டம்



விளாத்திகுளம்மே 01.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் அமைந்துள்ள 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் கடந்த 20ம் தேதி சித்திரைத்திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

ஒவ்வொரு நாளும் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஒவ்வொரு வாகனத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சியளித்து வந்தார், மீனாட்சி சுந்தரேஸ்வரரின் திருக்கல்யாண வைபவம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் வெகுவிமர்சையாகநடைபெற்றது.

இதனைத்தொடர்ந்து கோவில் நிலையத்திலிருந்து கிளம்பிய திருத்தேரில் மீனாட்சி சுந்தரேஸ்வரர், பிரியாவிடைநாயகி எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்து அருள் பாலித்தனர்.

திருத்தேரினை விளாத்திகுளம் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமானபொதுமக்கள்அரோகரா கோசம் விண்ணைப்பிளக்கவடம் பிடித்து நான்கு ரதவீதி வழியாக ஆயிரக்கணக்கான பக்தர்கள் திருத்தேரினை இழுத்து வந்தனர். திருத்தேரில் வீதி நெடுகிலும் வலம் வந்த மீனாட்சி சுந்தரேஸ்வரருக்கு பக்தர்கள் தேங்காய்,பழம் உடைத்து வழிபாடு நடத்தினர். 10ம் திருவிழா தேரோட்டத்தை முன்னிட்டு விளாத்திகுளம் காவல் உட்கோட்டத்துக்குட்பட்ட சுமார் 100க்கு மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

## ஈரோடு மாவட்டத்தில்

# 2 இடங்களில் 3 அடுக்கு பாதுகாப்பு முன் ஏற்பாடுகள் குறித்து கலெக்டர் ஆய்வு



ஈரோடு மே 1

ஈரோடு மாவட்டத்தில் உள்ள 8 தொகுதிகளிலும் கடந்த 23 ந் தேதி மாலை வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஓட்டு எண்ணும் இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள அறைகளில் வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டது. ஈரோடு கிழக்கு ஈரோடு மேற்கு மொடக்குறிச்சி பவானி பெருந்துறை அந்தியூர் ஆகிய 6 தொகுதிகளின் வாக்கு எண்ணிக்கை சித்தோடு ஐ ஆர் டி டி கல்லூரியிலும் கோபி பவானி சாகர் ஆகிய 2 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை கோபி கலைக் கல்லூரியிலும் நடைபெறுகிறது. இங்கு 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு 24 மணி நேரமும் துப்பாக்கி ஏந்திய போலீசார் கண்காணித்து வருகிறார்கள். வருகிற 4 ந் தேதி காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது. இந்த இடங்களில் ஈரோடு மாவட்ட ஆட்சியர் மற்றும் தேர்தல் அலுவலர் கந்தசாமி நேரில் சென்று ஆய்வு செய்தார். அப்போது அவர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூன்றடுக்கு பாதுகாப்புடன் கண்காணிப்பு கேமிராக்கள் மூலம் எல்.இ.டி. திரையில் கண்காணிக்கப்பட்டு வருவதையும் மற்றும் வாக்கு எண்ணும் மையத்தில் உள்ள பதிவேடுகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

தொடர்ந்து வாக்கு எண்ணும் மையமான சித்தோடு, அரசினர் பொறியியல் கல்லூரி மற்றும் வேயிசெட்டிபாளையம். கோயி மற்றும் அறிவியல் சுல்லூரியில் குடிநீர் வசதி கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகள் குறித்தும். வாக்கு எண்ணும் அறை வாகனம் நிறுத்துமிடம் நடால் வாக்குகள் வைப்பறை. செய்தியாளர்கள் அறை, கவர் கண்காணிப்பு அறை மற்றும் பல்வேறு முன் ஏற்பாடுகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## தென்தாமரைகுளம் அருகே

# மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி விழுந்து மெடிக்கல் ஊழியர் பலி

தென்தாமரைகுளம். மே 1

ஆளூர், தோப்புவிளையை சேர்ந்தவர் ராஜகுமார் வயது 59, கூலிவேலை செய்துவருகிறார்.இவர் தற்போது அஞ்சு கிராமம் அருகே உள்ள புன்னார் குளத்தில் குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். இவருக்கு நந்தகுமார் வயது 20 என்ற மகனும் ஒரு மகளும் உண்டு. மகளுக்கு திருமணம் ஆகி கணவருடன் வசித்துவருகிறார்.

நந்தகுமார் தென்தாமரைகுளத்தில் உள்ள ஒரு மெடிக்கலில் வேலை செய்து வந்ததாக கூறப்படுகிறது. இவர் சம்பவத்தன்று வீட்டில் மதிய உணவு சாப்பிடுவதற்காக அவரது மோட்டார் சைக்கிளில் வடுகன்பற்று சாமி தோப்பு சாலையில் வரும் போது கவர்குளம் தேரிவிளையில்வைத்து நிலைதடுமாறி கீழே விழுந்துள்ளார்.

இதில் நந்தகுமாருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. உடனே அருகிலிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். அங்கு தீவிர சிகிட்சைபிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிட்சையில் இருந்தவர் நேற்று முன்தினம் (28.04.2026) இரவு சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இதுகுறித்து அவரது தந்தை ராஜகுமார் தென்தாமரைகுளம் காவல் நிலையத்தில் புகாரளித்துள்ளார். இதையடுத்து போலிசார் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

## சுசீந்திரம் தாணுமாலைய சுவாமி கோவிலில்

# அன்னதான உண்டியல் காணிக்கை வருவாயாக 75 ஆயிரம் கிடைத்துள்ளது

சுசீந்திரம்.மே1

பிரசித்தி பெற்ற கோவில்களில் ஒன்றான சுசீந்திரம் தாணுமாலைய சுவாமி கோவிலில் ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து செல்வார்கள் குறிப்பாக வெளியூரில் இருந்து வரும் பக்தர்களுக்கும் ஏழை பக்தர்களுக்கும் அன்னதான வசதி செய்வதற்காக அரசு அன்னதானத் திட்டம் கொண்டு வந்தது அதன்படி சுசீந்திரம் தாணுமாலையசுவாமி கோவிலில் ஒரு அன்னதான உண்டியல் வைக்கப்பட்டுள்ளது இந்த உண்டியல் மாதம் தோறும் திறந்து எண்ணப்படுவது வழக்கம் அதுபோல நேற்று முன்தினம் அன்னதான உண்டியல் கோவில் மேலாளர் ஆறுமுகதரன் தலைமையில் கண்காணிப்பாளர் ஆனந்தன் ஆய்வார் சுதா கணக்கர் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் கோவில் ஊழியர்கள் உண்டியலை திறந்து எண்ணினர் இதில் 75 ஆயிரத்து 350 அன்னதானத்திற்கு வருவாயாக கிடைத்துள்ளது

## மணப்பாறை அருகே

# டிராக்டர் மோதி பைக்கில் சென்ற வாலிபர் பலி



புதுக்கோட்டை, மே.1

புதுக்கோட்டை மாவட்டம் தண்ணீர் பந்தல் பாளையம் பகுதியைச் சேர்ந்த பிரேம், மணப்பாறை கரூர் தேசிய நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, எதிரே வந்த குப்பை ஏற்றி வந்த டிராக்டர் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். வையம்பட்டி போலீசார் அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து, விபத்தை ஏற்படுத்திய டிராக்டர் ஓட்டுநரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மணப்பாறை அருகே

# ஸ்ரீரங்கம் உண்டியலில் 69.93 லட்சம் காணிக்கை



திருச்சி, மே. 1

ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி கோயிலில் செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்ட உண்டியலில் ரூ. 69 லட்சத்து 93 ஆயிரத்து 601 ரொக்கம், 78.900 கிராம் தங்கம், 840.200 கிராம் வெள்ளி மற்றும் 283 வெளிநாட்டு ரூபாய் நோட்டுகள் காணிக்கையாக கிடைத்தன. ஏப்ரல் மாதத்திற்கான இந்த காணிக்கைகளை எண்ணும் பணியில் கோயில் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபட்டனர்.



# கோவையில் புத்தக வெளியீட்டு விழா

கோவை மே:01

கோவை அரிமா சங்கம் சார்பில் கண்ணப்ப நகர் சங்கனூர் சாலையில் உள்ள ஆர் கே திருமண அரங்கில் கவிஞர் பொன்சிங் எழுதிய ஆற்றோரத்தில் ஓர் அத்திமரம் நூலை அரிமாசங்கத் தலைவர் அரிமா பி அமுல்தாஸ் வெளியிட முதல்நூலை அரிமாமுத்து ஆர் பழனிசாமி பெற்றுக்கொண்டு புத்தகத்தின் சிறப்புரையாற்றினார். கவிஞர் பொன்சிங் புத்தகத்தில் உள்ள கதைகளை சொல்லி விளக்கி ஏற்புரை ஆற்றினார். செயலர் அரிமா பி கே எல் சுரேஷ் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி உரையாற்றினார்.

## தேனி மாவட்டம்

# தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 வாக்கு எண்ணும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு



தேனி, மே1

தேனி மாவட்டம் தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 வாக்கு எண்ணும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெற்றது தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகபுதியகூட்டரங்கில், தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு வாக்கு எண்ணும் பணிகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தலைமையில் நேற்று (30.04.2026) நடைபெற்றது.

23.04.2026 அன்று ஒரே கட்டமாக நடைபெற்ற வாக்குப்பதிவை தொடர்ந்து, தேனி மாவட்டத்தின் 198. ஆண்டிபட்டி, 199. பெரியகுளம், 200. போடிநாயக்கனூர் மற்றும் 201. கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை, கொடுவிலார்பட்டியில் அமைந்துள்ள தேனி கம்மவார் சங்கம் பொறியியல் கல்லூரியில் 04.05.2026 அன்று நடைபெற உள்ளது. வாக்கு எண்ணும் மேஜையில் ஒவ்வொன்றிலும் ஒரு மேற்பார்வையாளர், ஒரு உதவியாளர் மற்றும் ஒரு நுண்பார்வையாளர் பணியாற்ற உள்ளனர். தபால் வாக்குச்சீட்டுகள் காலை 8.00 மணிக்கு எண்ணத் தொடங்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து காலை 8.30 மணிக்கு மின்னணு வாக்கு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்படும். மின்னணு வாக்கு இயந்திரங்கள்வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறை, வாக்கு எண்ணும் நாளன்று வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு, பின்னர் எண்ணும் மேஜைகளுக்கு கொண்டு செல்லப்படும். வாக்கு எண்ணும் அலுவலர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட மேஜையிலேயே இருந்து பணியாற்ற வேண்டும் என்றும், ஒவ்வொரு சுற்று வாக்குகளும் வேட்பாளர்களின் முகவர்களுக்கு தெளிவாக காண்பிக்கப்பட வேண்டும் என்றும்அறிவுறுத்தப்பட்டது. மின்னணு வாக்கு எண்ணிக்கைக்கு 204 பேர் (68 மேற்பார்வையாளர்கள், 68 உதவியாளர்கள், 68 நுண்பார்வையாளர்கள்) மற்றும் தபால் வாக்கு எண்ணிக்கைக்கு 96 பேர் (24 மேற்பார்வையாளர்கள், 48 உதவியாளர்கள், 24 நுண்பார்வையாளர்கள்) என மொத்தம் 300 அலுவலர்கள் ஈடுபட உள்ளனர். வாக்கு எண்ணிக்கையின் போது ஏதேனும் ஐயம் ஏற்பட்டால் உடனடியாக உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தெரிவிக்க வேண்டும் என்றும், இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை முறையாக பின்பற்றி நேர்மையாகவும் நியாயமாகவும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். இப்பயிற்சி வகுப்பில் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# எட்டுக்குடியில் சித்ரா பௌர்ணமி தேரோட்டம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பக்தி பரவசத்தோடு வடம் பிடித்து தேரை இழுத்தனர் .

எட்டுக்குடியில் சித்ரா பௌர்ணமி தேரோட்டம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பக்தி பரவசத்தோடு வடம் பிடித்து தேரை இழுத்தனர் .

முருகனின் ஆதிபடை என அழைக்கப்படும் நாகப்பட்டினம் மாவட்டம் எட்டுக்குடியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் சித்ரா பௌர்ணமி பெருவிழாவை முன்னிட்டு தேரோட்டம் வெகு விமர்சையாக நடைபெற்றது.பதினெண் சித்தர்களில் ஒருவரான வான்மீகி சித்தர் ஜீவசமாதி அடைந்த புண்ணிய ஸ்தலமாக விளங்கும் இக்கோயிலில், பக்தர்களின் மனநிலைக்கு ஏற்ப இறைவன் குழந்தை, இளைஞன், முதியவர் ஆகிய வடிவங்களில் காட்சி அளிப்பதாக நம்பப்படுகிறது.

ன குறிஞ்சி நிலத்தின் காவடி சிறப்பை ஒத்த வகையில், மருத நிலமான எட்டுக்குடியில் பால் காவடி மிகவும் சிறப்பாக நடைபெறம். அந்த வகையில் இந்தாண்டுக்கான திருவிழா கடந்த ஏப்ரல் 22ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி 11 நாட்கள் நடைபெறும் திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் நடைபெற்றது.கீழவீதியில் உள்ள தேரடியில் இருந்து புறப்பட்ட தேர், தெற்கு வீதி,



மேல வீதி, வடக்கு வீதி வழியாக நகர்ந்து மீண்டும் நிலையை வந்தடையும்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் “கந்தனுக்கு அரோகரா, முருகனுக்கு அரோகரா” என முழக்கமிட்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு 56 மணி நேர இடைவிடாத பாலாபிஷேகம் மற்றும் ரதக்காவடி ஊர்வலம் நடைபெறுகிறது.

பக்தர்கள் வசதிக்காக பல்வேறு பகுதிகளில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. மேலும் பொது சுகாதாரத்துறை சார்பில் மருத்துவ முகாம்கள் மற்றும் குடிநீர் வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. மேலும் அசம்பாவித சம்பவம் நிகழாமல் இருக்க 360 டிகிரி கோணத்தில் நகரும் சிசிடிவி வாகனம் மூலம் கண்காணிப்பு பணிகள் தீவிர படுத்தப்பட்டுள்ளன.



# திருச்சி அரசு மருத்துவமனையில் சிறப்பு வார்டு திறப்பு

திருச்சி, மே 1

திருச்சி மகாத்மா காந்தி அரசு மருத்துவமனையில் கோடை வெப்பம் அதிகரித்துள்ளதால், ஹீட் ஸ்ட்ரோக் பாதிப்புகளுக்கு சிறப்பு வார்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்த வார்டில் மொத்தம் 14 படுக்கைகள் தயார் நிலையில் உள்ளன. இதில்ஐசியூபிரிவில் நான்கு படுக்கைகள், ரெட் ஜோனில் இரண்டு படுக்கைகள் மற்றும் வார்டுகளில் எட்டு படுக்கைகள் என வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வெப்பத்தால் பாதிக்கப்படுபவர்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்கும் வகையில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் கண்காணிப்பில்.



# முசிறி மகா மாரியம்மன் ஆலயத்தில் தீமிதி விழா

திருச்சி, மே 1

திருச்சி மாவட்டம், முசிறியில் உள்ள ஸ்ரீ மகா மாரியம்மன் திருக்கோயிலில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு, முக்கிய நிகழ்ச்சியான தீமிதி திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதில், தீக்குண்டம் இறங்கும் பக்தர்கள் காவிரி ஆற்றில் புனித நீராடி, கரகம் பாலித்து, சிறப்பு பூஜைகள் செய்து மாரியம்மனை வழிபட்டனர். பின்னர் மேள தாளங்கள் முழங்க ஊர்வலமாக வந்து, கோவில் வளாகத்தில் உள்ள தீக்குண்டத்தில் இறங்கி தீ மிதித்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர்.

### சேலம்

# விஎஸ்பிரியாணி உணவகத்தை சேலம் ஆர்ஆர் பிரியாணி

## உரிமையாளர் தமிழ்ச்செல்வன் திறந்து வைத்தார்



கோவை மே:01

சேலம் மாவட்டத்தை தலைமை இடமாகக்கொண்டு செயல்படும் சேலம் வி எஸ் பிரியாணி உணவகத்தின் 6வது புதிய கிளை கோவை கிராஸ்கட் சாலையில் உள்ள 10வது வீதியில் புதிதாக திறக்கப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக சேலம் ஆர்ஆர் பிரியாணி உரிமையாளர் தமிழ்செல்வன் திறந்து வைத்தார்.

திறப்பு விழா சலுகையாக 2 சிக்கன் பிரியாணி வாங்கினால் 1 சிக்கன் பிரியாணி இலவசம் 2 மட்டன் பிரியாணி வாங்கினால் ஒரு மட்டன் பிரியாணி இலவசம் சேலம் வி எஸ் பிரியாணி சார்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### மணவாளக்குறிச்சி அருகே

# பைனான்ஸ் ஊழியரை மிரட்டிய பிரபல ரவுடி மீது வழக்கு

குளச்சல், மே. 1

நாகர்கோவில் பட்டகசாலியன்விளை பகுதியை சேர்ந்தவர் பீட்டர் மகன் போஜன் (33). நாகர்கோவிலில் உள்ள தனியார் நிதி நிறுவனத்தில் லோன் வழங்கும் பிரிவில் ஊழியராக வேலை செய்து வருகிறார். மணவாளக்குறிச்சி கொல்லன் விளையை சேர்ந்த விபின் பிரியன் (31) என்பவர் போஜன் பணியாற்றிய நிதி நிறுவனத்தில் கடந்த பிப்ரவரி மாதம் ரூ.62 ஆயிரத்து 294 ரூபாய் கடன் வாங்கியதாக தெரிகிறது. இதை அடுத்து முதல் மாத தவணையை பிபின் பிரியன் உரிய தேதிக்குள் செலுத்தவில்லை என தெரிகிறது. இதையடுத்து நிதி நிறுவன ஊழியர் போஜன் சம்பவ தினம் பிபின் வீட்டிற்கு பணம் கேட்க சென்றார். அப்போது அங்கு அவருடைய தாய் மட்டும் இருந்துள்ளார்.

இதை அடுத்து போஜன் செல்போனில் தொடர்பு கொண்டு பிபின் பிரியனிடம் பேசினார். தனது வீட்டிற்கு சென்றதால் ஆத்திரமடைந்த பிவின் எப்படி என் வீட்டிற்கு சென்று பணம் கேட்பாய்? எனக்கூறி தகாத வார்த்தைகளால் திட்டி உள்ளார். மேலும் அறிவாளால் வெட்டிக் கொன்று விடுவேன் என செல்போனில் போஜனை மிரட்டினார்.

இதனால் பயந்து போன போஜன் இது குறித்து மனவளக்குறிச்சி காவல் நிலையத்தில்புகார்அளித்தார். போலீசார் நிதி நிறுவன ஊழியரை மிரட்டிய விபின் பிரியன் மீது வழக்கு பதிவு செய்தனர். பிபின் மீது மனவளக்குறிச்சி, மண்டைக்காடு, திருவட்டார், பூதப்பாண்டி காவல் நிலையங்களில் பல்வேறு வழக்குகள் உள்ளதும் பிரபல ரௌடியாக இருப்பதாகவும் போலீசார் தெரிவித்தனர்.



தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஐந்து சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்குப்பதிவு செய்யப்பட்ட வாக்குப்பதிவு மின்னணு இயந்திரங்களை செட்டி கரை அரசு பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தில் மூன்றடுக்கு பாதுகாப்பு முறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் சதீஷ் நேரில் பார்வையிட்டார்.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் நடைபெற்றதையடுத்து, கிருஷ்ணகிரி அரசு பல்தொழில்நுட்ப கல்லூரியில், கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்குஅமைக்கப்பட்டுள்ளவேட்பாளர்களின்முகவர்களுக்கானகண்காணிப்பு அறையை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



### தஞ்சாவூர் மாவட்டத்தில்

# 1.17 லட்சம் மாணவர்களுக்குபாட புத்தகங்கள் அனுப்பி வைப்பு

## மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி பார்வையிட்டார்

தஞ்சாவூர் . மே 1

தஞ்சாவூர் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு பாட புத்தகங்கள் லாரிகளில் அனுப்பி வைக்கப்பட்டன. இதனைமாவட்டமுதன்மை கல்வி அதிகாரி பார்வையிட்டார் பள்ளி திறக்கும் முதல் நாளில் 1.17 லட்சம் மாணவர்களுக்கு பாட புத்த கங்கள் வழங்கஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன

தமிழகத்தில்கோடை விடுமுறை விடப்பட்டுள்ளது .ஜூன் 1 ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்பட உள்ள நிலை யில் மாணவ மாணவிகளுக்கு முதல் நாளிலேயே பாடப் புத்தகங் கள் வழங்கும் நோக்கில் தஞ்சாவூர் மாவட்டம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரமாக நடை பெற்று வருகிறது அதன்படி அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு முதல் பருவ பாட புத்தகங்களை அனுப்பி வைக்கும் பணி தொடங்கியது

அதன்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு முதல் பருவ பாட புத்தகங்களை அனுப்பி வைக்கும் பணி தொடங்கியது பள்ளி திறந்த முதல் நாளிலேயே மாணவர்களுக்கு புத்தகங்கள் கிடைக்குமாறு திட்டமிட்டு இந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள ன.

தஞ்சாவூர் மேம்பாலம் அரசு பள்ளி வளாகத்தில் இருந்து தஞ்சாவூர் மாவட்டத்திற்கு உட்பட்ட தஞ்சாவூர் நகரம், புறநகர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, சேது பாவாசத்திரம் ,மதுக்கூர், பேராவூரணி, திருவோணம், பூதலூர் உள்ளிட்ட 9 வட்டாரங்களை சேர்ந்த 197 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு லாரிகள் மூலம் புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பட்டன

இந்தப் பணியை மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி பேபி தொடங்கி வைத்து பார்வையிட்டார் தொடர்ந்து சில நாட்களில் அனைத்து பள்ளிகளுக்கும் புத்தகங்கள் சென்றடையும், வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கல்வி அலுவலர் மாதவன் உடன் இருந்தார்

மேலும் கும்பகோணம் கல்வி மாவட்டத்திற்கு உட்பட்ட 6 வட்டார ங்களிலும் இதே போல் பாட புத்தக ங்கள் அனுப்பி வைக்கும் பணி

ஒரே நேரத்தில் தொடங்கி உள்ளது இதன் மூலம் ஜூன் 1 ஆம் தேதி பள்ளிகள் திறக்கும் முதல் நாளி லேயே மாவட்டத்தில் உள்ள ஒரு லட்சத்து17 ஆயிரம் மாணவ மாணவிகளுக்கு பாடபுத்தகங்கள் வழங்கப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.




மதுரை உலகப் புகழ்பெற்ற சித்திரைத் திருவிழா நடைபெற்று வருகின்றது அதில் ஒரு பகுதியாக தேரோட்டம் மிக விமர்சியாக பக்தர்கள் ஆயிரக்கணக்கு பக்த கோடி மக்கள் கலந்து கொண்டு வடம் பிடித்து தேரை இழுத்துச் சென்றனர் பக்த கோடி மக்கள் அனைவரும் உற்சாகத்தில் அம்மனை தரிசித்து வழிபட்டனர்

### துறையூர்

# 136 கிலோ குட்கா பறிமுதல்; ஒருவர் கைது

திருச்ச், மே1

திருச்சி மாவட்டம் துறையூர் அருகே நெட்டவேலம்பட்டியில், விற்பனைக்காக 136 கிலோ புகையிலை பொருட்களை வைத்திருந்த ரவீந்திரன் என்பவரை உப்பிலியபுரம் போலீசார் கைது செய்தனர். அவரிடம் இருந்து புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுஅவரிடம்தீவிரவிசாரணைநடைபெற்று வருகிறது.



### திருச்சியில்

# தபால் வாக்குகள் பிரித்து அனுப்பும் பணி

திருச்சி, மே 1

தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களில் பதிவான தபால் வாக்குகள், திருச்சி கலையரங்கம் திருமண மண்டபத்தில் இருந்து பிரித்து அனுப்பும் பணி ஏப்ரல் 28ஆம் தேதி தொடங்கியது.

இப்பணிகளை கூடுதல் தலைமை தேர்தல் அலுவலர் சிவஞானம் மற்றும் திருச்சிமாவட்ட தேர்தல் அலுவலர் சரவணன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். மேலும், அவர்கள் அலுவலர்களுக்கு ஆலோசனைகளையும் வழங்கினர்.

### திருச்சியில்

# லஞ்சம் வாங்கிய காவல் உதவியாளருக்கு 2 ஆண்டு சிறை



திருச்சி, மே. 1

திருச்சி சிங்காரத்தோப்பு பகுதியில் தையல் கடை நடத்தி வரும் மணிமாறன் என்பவரின் கடையின் பொருட்கள் 2009ல் திருடு போனது. இது குறித்து புகார் அளிக்க சென்றபோது கோட்டை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் முத்துக்குமார் 1500 ரூபாய் லஞ்சம்கேட்டதாககூறப்படுகிறது. லஞ்சம்கொடுக்க விரும்பாத மணிமாறன் லஞ்ச ஒழிப்பு துறையில் அளித்த புகாரின் பேரில், ஆய்வாளர் முத்துக்குமார் லஞ்சம் வாங்கும்போது கையும் களவுமாக கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு விசாரணை முடிந்து இன்று நீதிபதி புவியரசு, முத்துக்குமாருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனையும் பத்தாயிரம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

### திருச்சிக்கு ரயிலில் வந்த

# 25 கிலோ கஞ்சா பறிமுதல்

திருச்சி, மே1

மேற்குவங்க மாநிலம் ஹவுராவிலிருந்து கன்னியாகுமரி நோக்கிச் சென்ற ஹவுரா எக்ஸ்பிரஸ் ரயில் நேற்று நள்ளிரவு திருச்சி ரயில் நிலையம் வந்தடைந்தது. ரயிலில் இருந்து இறங்கிய மர்ம நபர் ஒருவர் மூட்டையுடன் சென்றார். சந்தேகம் அடைந்த ரயில்வே போலீசார் மூட்டையை சோதித்தபோது, அதில்25கிலோகஞ்சாஇருந்ததுகண்டறியப்பட்டது. போலீசார் கஞ்சாவை பறிமுதல் செய்து, சம்பந்தப்பட்ட நபருக்கு கஞ்சாவை வழங்கியது யார், அவர் எங்கு கொண்டு செல்கிறார் என்பது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### திருச்சி

# எரிந்த மின்சார ஸ்கூட்டர் இழப்பீடு வழங்க உத்தரவு

கரூர், மே 1

கரூர் மாவட்டம் நங்கவரத்தைச் சேர்ந்த முத்தமிழ் செல்வி, திருச்சி உக்கடையில் உள்ள PNA நிறுவனத்தில் வாங்கிய மின்சார ஸ்கூட்டர், சார்ஜ் செய்யும்போது வெடித்து எரிந்துள்ளது. இதனால், உற்பத்தி நிறுவனமான தெலுங்கானா பி.யு.ஆர். நிறுவனம் மீது முத்தமிழ் செல்வி திருச்சி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த ஆணையம், இரண்டு நிறுவனங்களும் சேர்ந்து முத்தமிழ் செல்விக்கு ₹1.84 லட்சம் இழப்பீடு வழங்க உத்தரவிட்டது.

### கன்னியாகுமரிக்கு சுற்றுலா வந்த

# கேரளா இளம் பெண்கள் சடலமாக கண்டெடுப்பு

## போலீசார் தீவிர விசாரணை




நாகர்கோவில்,மே1

கன்னியாகுமரியில் மாயமான இரண்டு இளம் பெண்கள் வாவத்துறை தூண்டில் வளவு கடல் பகுதியில் சடலமாக கண்டெடுப்பு. உடலை கைப்பற்றி கடலோர பாதுகாப்பு குழும போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

உலக புகழ்பெற்ற சுற்றுலாத்தலமான கன்னியாகுமரியில் கோடை விடுமுறையை ஒட்டி ஏராளமானசுற்றுலாபயணிகள்குவிந்துவருகின்றனர். கேரளம் மாநிலத்திலிருந்து கன்னியாகுமரிக்கு சுற்றுலா வந்து காணாமல் போன சகோதரிகளை கன்னியாகுமரி போலீசார் வழக்கு பதிவு செய்து தேடி வந்தனர்.இந்நிலையில்நேற்றுகாலைகன்னியாகுமரி வாவத்துறை தூண்டில் வளைவு பகுதியில் கடலில் மீன் பிடிக்க சென்று கரை திரும்பிய மீனவர்கள் இரண்டு உடல்கள் தூண்டில் வளைவுக்குள் சிக்கியிருப்பதைகண்டுகன்னியாகுமரிபோலீசாருக்கு தகவல்தெரிவித்தனர்.அவர்கள்கடலோரபாதுகாப்பு குழும போலீசார் உடன் வாவத்துறை தூண்டில் வளைவு பகுதிக்கு விரைந்து சென்று மீனவர்கள் உதவியுடன் பாறையில் சிக்கியிருந்த உடல்களை மீட்டு மேலே கொண்டு வந்தனர். பின்பு உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து அவர்கள் காணாமல்போனஇரண்டுஇளம்பெண்கள்இவர்கள் தான் என்று உறுதி அளித்த பின்பு உடலை மீட்டு உடற்கூறாய்வுக்காகஆசாரிப்பள்ளம்அரசுமருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் . மேலும் கடலோர பாதுகாப்பு குழும போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

முதற்கட்ட விசாரணையில் கேரளம் மாநிலம் கோட்டயம் மாவட்டம் குறிகாட்டில் ,கிடங்கூர் பகுதியை சேர்ந்தவர் பிலிப், இவரது மனைவி மேரி. இந்த தம்பதியினருக்கு எலிசபெத் பிலிப், ஆனி பிலிப், மீரா பிலிப் ஆகிய 3 மகள்கள் உள்ளனர். இதில் மூத்த மகளான எலிசபெத் பிலிப் திருமணம் ஆகி லண்டனில் வசித்து வருவதாகவும், ஆனி பிலிப் (வயது 35) என்பவர் எக்ஸ்ரே டெக்னீசியன் படித்துவிட்டு அமெரிக்கா வில் வேலை பார்த்து வருவதாகவும் அவரது தங்கையான மீரா பிலிப் (32) என்பவர் என்ஜினீயரிங் படித்து விட்டு அமெரிக்காவில் வேலை பார்த்து வருவதாகவம் கூறப்படுகிறது . இருவரும் கடந்த 15 வருடங்களாக அமெரிக்காவில் வசித்து வருவதாகவும், வருடத்துக்கு ஒரு முறை தங்களது சொந்த ஊரான கேரளம் மாநிலம் கோட்டயத்துக்கு வந்து செல்வது வழக்கம். இந்தநிலையில் அமெரிக்காவில் இருந்து இருவரும் இந்தியா வந்துள்ளனர். பின்னர் அவர்கள் ராமேஸ்வரம், மதுரை போன்ற இடங்களை சுற்றி பார்த்துவிட்டு கடந்த 26 ஆம் தேதி மாலை கன்னியாகுமரிக்கு சுற்றுலா வந்துள்ளனர். அங்குள்ள ஒரு தங்கும் விடுதியில் 2 பேரும் அறை எடுத்து தங்கியுள்ளனர் . அங்கிருந்து வெளியே சென்றவர்கள் அந்த தங்கும் விடுதிக்கு 2 நாட்களாக திரும்பி வரவில்லை. இதனால் லாட்ஜ் ஊழியர்கள் அவர்கள் கொடுத்த செல்போன் நம்பரை வைத்து இளம் பெண்களின் தாயார் மேரி என்பவரை தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தனர்.சகோதரிகளின்தந்தையானபிலிப்பின் அண்ணன் ஷிஷு என்பவரும், அவர்களது உறவினர்களும் கன்னியாகுமரிக்கு வந்து மாயமான சகோதரிகளை குமரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் தேடி பார்த்தனர். ஆனால் எங்கு தேடியும் அவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த சம்பவம் குறித்து ஷிஷூ கன்னியாகுமரி காவல் நிலையத்தில் புகார் செய்தார். புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து காணாமல் போன அக்காள் தங்கை இருவரையும் கன்னியாகுமரி போலீசார் தேடி வந்த நிலையில் நேற்று அவர்கள் சடலமாக மீட்கப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. தொடர்ந்து கடலோர பாதுகாப்பு குழும போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



தருமபுரியில் சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு செல்வதற்காக தருமபுரி புறநகர் பேருந்து நிலையத்தில் சிவபக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கூட்டம் அலைமோதியது. சிறப்பு பேருந்துகள் இயக்கப்படாதால் பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டனர்.



### இருசக்கர வாகனத்தில் சென்ற போது விபத்து

# மூளை சாவு அடைந்த வாலிபரின் உடல் உறுப்புகள் தானம்

## 7 பேருக்கு மறுவாழ்வு கிடைத்தது

தஞ்சாவூர் மே.1

இருசக்கர வாகனத்தில் சென்ற போது கீழே விழுந்ததில் காயம் அடைந்த வாலிபர் மூளைச்சாவு அடைந்தார். இதையடுத்து அவருடைய உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டது .இதன் மூலம் 7 பேருக்கு மறு வாழ்வு கிடைத்தது

திருவாரூர் மாவட்டம் மருதப்பட்டினத்தை சேர்ந்த சேரன் (வயது 20) இவர் கடந்த 24ஆம் தேதி இருசக்கர வாகனத்தில் சென்ற போது விபத்துக்குள்ளாகி கீழே விழுந்ததில் தலையில் பலத்த காயமடைந்தார். உடனடியாக அவரை திருவாரூர் அரசு மருத்துவ க் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மேல் சிகிச்சைக்காக 25ஆம் தேதி தஞ்சாவூர்அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் டாக்டர்கள் கண்காணிப்பில் இருந்த சேரன் முளை சாவு அடைந்தார். இதை யடுத்து அவரது உடல் உறுப்புகள் தனமாக வழங்குவது குறித்து டாக்டர்கள் அவரது பெற்றோர் செந்தில் ,ரேணுகா, சகோதரர் விஷாலிடம் விளக்கமாக எடுத்து ைரத்தனர்

மனிதநேய உணர்வுடன் அவர்களின் குடும்பத்தினர் உடனடியாக ஒப்புதல் அளித்தனர். அதன்படி சேரனின் கல்லீரல், சிறுகுடல், 2 சிறுநீரகங்கள், கண்கள் மற்றும் தோல் ஆகியவை அறுவை சிகிச்சை மூலம் பாதுகாப்பாக அகற்றப்பட்டன

இதில் ஒரு சிறுநீரகம் தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் உள்ள நோயாளிக்கு மாற்று அறுவை சிகிச்சைக்காக பயன்படுத்தப் பட்டது . மற்றொரு சிறுநீரகம் மதுரைஅரசுராஜாஜி மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டது. கல்லீரல் திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கும், சிறுகுடல் சென்னை தனியார் மருத்துவ மனைக்கும் கொண்டு செல்லப்பட்டது

மேலும் கண்கள் தஞ்சாவூர் அரசு இராசா மிராசுதார் மருத்துவமனை க்கும், தோல் மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கும் தானமாக வழங்கப்பட்டது. இந்த உடல்உறுப்புகள அனைத்தம் தஞ்சாவூரில் இருந்து ஆம்புலன்ஸ் மூலம் போலீஸ் பாதுகாப்புடன் விரைவாக அனுப்பி வைக்கப்பட்டது

பின்னர்சேரனின் உடலுக்கு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் பூவதி தலைமையில், அரசு மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது. சேரனின் குடும்பத்தினர்இந்தஉயர்ந்ததியாகத்தின் மூலம் 7 நபர்கள் மறுவாழ்வு பெற்றுள்ளனர். இளம் வயதிலேயே உயிர் நிர்த்தாலும், உடல் உறுப்புகள் தானம் மூலம் பலரின் வாழ்வில் நம்பிக்கை ஒளியாக மாறியுள்ளது. குறிப்பிட த்தக்கது.






தஞ்சாவூர் அடுத்துள்ள வல்லம் பெரியார் மணியம்மை நிகர் நிலை பல்கலைக்கழகத்தில்

# புரட்சி கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் 136 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா

தஞ்சாவூர் மே.1

தஞ்சாவூர்அடுத்துள்ள வல்லம் பெரியார் மணியம்மை நிகர் நிலை பல்கழகத்தில் பெரியார் சிந்தனை உயராய்வு மய்யம், மாணவர் நிர்வாக மய்யம், மற்றும்மொழிகள் துறையினரால் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் 136 வது ஆண்டுபிறந்தநாள் விழா நடைபெற்றது

விழாவில் கவியரங்கம் லீ கார் பூசியர் அரங்கத்தில் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை இளங்கலை மாணவி ரா.வை. லதா ஸ்ரீ அனைவரையும் வரவேற்றார்

எழுத்தாளர் வல்லம் தாஜூ பால் நடுவராக இருந்து புதியதோர் உலகம் செய்வோம் என்ற தலைப்பிலும் ,பெண்ணுரிமை பெற்ற உலகம் என்ற தலைப்பில் உதவிப்பேராசிரியர் து உமாமகேஸ் வரியும்,

மூட நம்பிக்கையற்ற உலகம் என்ற தலைப்பில் கணினி அறிவியல் துறை முதுகலை மாணவி ஸ்ரீநிதியும், போரற்ற உலகம் என்ற தலைப்பில் உதவி பேராசிரியர்

அரசியல் அறிவியல் துறை இர. சாம் ராஜாவும், சமத்துவ உலகம்என்ற தலைப்பில்இதழியல் மற்றும் மக்கள் தொடர் பியல் துறை இளங்கலை மாணவி க.முத்தரசி ஆகியோர் பேசினர்

நிறைவாக அரசியல் அறிவியல் துறை இளங்கலை மாணவி ஜா. ஜெனிலியா ஜான்சி நன்றி கூறினார்.

### குமரியில்

# பணி ஓய்வு பெறும் போலீசாருக்கு நினைவு பரிசு வழங்கிய மாவட்ட எஸ் பி



நாகர்கோவில், மே.1

காவல்துறையில் பணிபுரிந்து இந்த மாதஇறுதியில்ஓய்வில்செல்லவிருக்கும் 4 உதவி ஆய்வாளர்கள்,4 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுடன் மாவட்ட காவல்அலுவலகத்தில்வைத்துமாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் கலந்துரையாடினார்.

அதன்படி பணியில் சிறப்பாக செயல்பட்டு தங்களது பணியை நிறைவு செய்யும் அனைவரையும் பாராட்டி சான்றிதழ் மற்றும் வாழ்த்து மடல்களை வழங்கி கௌரவித்தார்.

காவல்துறையில் நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றி ஓய்வுபெறும்உங்களுக்குஎன்மனமார்ந்த பாராட்டுகள். பணி ஓய்விற்குப் பின், நீங்கள் உங்கள் குடும்பத்துடன் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும், சகலவளங்களுடனும்வாழஎன்னுடைய இத யப்பூர்வமான நல்வாழ்த்துகளைத் தெ ரிவித்துக் கொள்கிறேன். என கூறினார்.



# ஒழுகினசேரி வள்ளியாமடம் இசக்கியம்மன் கோவிலில் பொங்கல் வழிபாடு

சுசீந்திரம்,மே.1

ஒழுகினசேரியில் உள்ள வள்ளியாமடம் இசக்கி அம்மன் கோவிலில் 1808 பானைகளில் பொங்கல் வழிபாடு நடைபெற்றது. சாலை ஓரத்தில் பெண்கள் நீண்ட வரிசையில் பொங்கல் வைத்து வழிபட்டனர். நிகழ்ச்சியில் எம்.ஆர். காந்தி எம்.எல்.ஏ,செயல் அலுவலர் கவிதா,டாக்டர்.பூர்ணிமா கவுன்சிலர் அக்சயா கண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



### அகஸ்தீஸ்வரம் விவேகானந்தா கல்லூரியில்

# வைரவிழா நுழைவுவாயில் அடிக்கல் நாட்டுவிழா: விஜய்வசந்த் எம்.பி பங்கேற்பு

தென்தாமரைகுளம்., மே. 01

கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரத்தில் உள்ள விவேகானந்தா கல்லூரியில் இன்று வைரவிழா நுழைவுவாயில் அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது.

விவேகானந்த கல்லூரி முதல்வர் டி. சி.மகேஷ் தலைமை வகித்தார். விவேகானந்தா கல்விக் கழக தலைவர் பாலமுருகன், துணைத்தலை வர்கள் மணி, சந்திரமோகன், துளசி முத்துராம், செயலாளர் ராஜன், இணைச்செயலாளர் இராதாகிருஷ்ணன், பொருளாளர்டாக்டர். பிரியதர்ஷினி, உறுப்பினர், ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் எம்பி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பூமி பூஜை துவக்கி வைத்து அடிக்கல் நாட்டினார்.

முன்னதாக அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகை தந்த விஜய் வசந்த் எம்பி க்கு கல்லூரி நிர்வாகம் சார்பில் சால்வை அணிவித்து வரவேற்பு அளித்தனர்.

நிகழ்ச்சியில் திமுக ஒன்றிய செயலாளர் பாபு, காங்கிரஸ் மாநில செயலாளர் வழக்கறிஞர் சினிவாசன், மதிமுக மாவட்ட செயலாளர் வெற்றிவேல், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் அரோக்கியராஜன், அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி தலைவி அன்பரசி ராமராஜன், அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி காங்கிரஸ் தலைவர் விஜயகுமார், வர்த்தக காங்கிரஸ் மாவட்ட செயலாளர் கிங்ஸிலின், குமரி மாவட்ட வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் டேவிட்சன், சாமிதோப்பு தலைமைப்பதி தலைமை குரு வழக்கறிஞர் பால ஜனாதிபதி மற்றும் விவேகானந்தா கல்லூரி நிர்வாகிகள், பேராசிரியர்கள், பணியாளர்கள் உட்பட மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.